தரம் 10 11

O/L

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## சுவரொட்டி

ZOOM ONLINE CLASS

சரியான றைத்
தெ யுங்கள்

TUTE 67



The Best TAMIL ACADEMY
அகரம்
தினேஸ் ONLINE ACADEMY

REGISTER NOW 0778054232

தமிழ் ஆசான்
"அகரம் தினேஸ்"
SLTS, BA (honours) IN TAMIL DIP IN G/D & ARTIFICIAL INTERLLIGENCE

05 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

**சுவரொட்டி**

சுருக்கச் சொல்லி விளங்கவைக்கும் வகையில் செய்த ஒன்றை தயாரித்து சுவர்களில் ஒட்டப்படுவதால் சுவரொட்டி என்று அழைக்கப்படும்.

**சுவரொட்டியின் தன்மை**

பொது மக்களது கவனத்தை ஈர்த்து செய்தியொன்றை தெரிவிப்பனவாகவும், சுருக்கச் சொல்லி விளங்க வைப்பதாகவும் அமைய வேண்டும்.

**சுவரொட்டி ஒன்றில் அமைய வேண்டிய அம்சங்கள்**

- கவர்ச்சியான அல்லது ஆக்கப்பூர்வமான மொழிநடையை கையாள்வார். உடனடியாகத் தேவையான அல்லது முக்கியமான தகவல்களை முதன்மைப்படுத்தல்.
- மகுட வாசகங்களை கவர்ச்சியாக கையாளல்
- பெரிய எழுத்தக்கள், வண்ண எழுத்துக்கள ஆகியவற்றை பயன்படுத்தல்.
- நிழற்படங்கள், ஓவிங்கள் ஆகியவற்றை பயன்படுத்தல்.
- கருத்துப்படங்கள், கெலிச்சித்திரங்கள் முதலியவற்றை பொருத்தமுற இணைத்தல்.
- குறியீட்டுப் பாங்கில் விடங்களை புலப்படுத்தல்.

**சுவரொட்டியின் பண்புகள்**

- பெரிய எழுத்துக்களில் அமைதல்
- கருத்தாழம் மிக்க சிறிய வசனத்திலான சொற்றொடர்கள், கூற்றுக்களை கொண்டிருத்தல்
- மக்களை கவரும் தன்மை
- கவனத்தை ஈர்க்கும் வாக்கிய அமைவு, விழிப்பு என்பவற்றை கொண்டிருத்தல்.
- வெவ்வேறு நிறங்களையும், எழுத்துக்களையும் கையாண்டு வெளிப்படுத்தல்.
- வித்தியாசமான பாணியிலான கருத்துப்படங்கள் சித்திரிக்கப்டுகின்றமை.

**சுவரொட்டிகள் வெளியிடப்படும் துறைகள்**

- பொதுத்துறை சார்ந்தவை
- அரசியல் சார்ந்தவை
- பொருளாதாரம் சார்ந்தவை
- விளம்பரங்கள் சார்ந்தவை



AGARAM DHINES


பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹிம்
புகை, மது தவிர்ப்பீர்!
மது, மற்றும் சூதாட்டம் பற்றி உம்மிடம் கேட்கின்றனர். அவ்விரண்டிலும் பெரும் கேடும், மக்களுக்கு சில பயன்களும் உள்ளன. அவ்விரண்டின் பயனை விட கேடு இவ்வுலகிலும், மறுமையிலும் மிகப்பெரியது எனக் கூறுவீராக! அல்குர்ஆன் 2:219
அழிவை நோக்கி செல்லாதீர்கள்!
100 நபர்களுக்கு நுரையீரல் புற்றுநோய் ஏற்பட்டால், அதில் 90 நபர்களுக்கு புகை பிடிப்பதால் தான் ஏற்படுகிறது.
உங்கள் கைகளால் (உங்களுக்கு) நாசத்தை தேடிக் கொள்ளாதீர்கள். அல்குர்ஆன் 2:195
தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் (TNTJ)
மாணவரணி
காயல்பட்டணம் கிளை
அனைத்து சமுதாய மக்களுக்கும் புரியும் வண்ணம் எளிய நடையில்
திருகுர்ஆன் தமிழாக்கம், இஸ்லாமிய நூல்கள், சீடிக்கள் இலவசமாக
தொடர்புக்கு :
7200630835, 9952790849

AGARAM D


தமிழ் 99.5 99.7
சிறுவர் தினத்தை முன்னிட்டு தமிழ் FM நடாத்தும்
"தங்கக்குரல் பேச்சு போட்டி"
8 முதல் 15 வயதிற்குட்பட்ட சிறுவர்கள்
"தங்கத்தமிழ்"
எனும் தலைப்பில் ஒன்றரை நிமிடங்கள் பேசி
அதை தெளிவாக உங்கள் Mobile Phoneஇல்
Videoவாக பதிவு செய்து
076 0995 997 எனும் எமது
WhatsApp இலக்கத்திற்கு அனுப்புங்கள்.
உங்கள் வீட்டு சிறார்களின்
குரலையும் ஜொலிக்க விடுங்கள்.
facebook
தெரிவு செய்யப்படும் Videoக்கள்
தமிழ் FM Official Facebook Pageஇல்
Upload செய்யப்படும்
பெறுமதியான பல பரிசில்களையும்
உங்கள் வீட்டு குழந்தைகள் வெல்லும் வாய்ப்பு




**அன்பார்ந்த பெரியோர்களே!**

10 ஆண்டுகளுக்குப் பின் பிறந்த தனது ஆசை மகளை டெங்குலிருந்து காப்பாற்ற முடியாமல், கிணற்றில் வீசிக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டார் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த தாய்!

தனி அரசு மருத்துவமனையில் டெங்கு நோயால் பாதித்த தனது குழந்தைக்கு உரிய மருத்துவம் செய்யாததால், தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பல ஆயிரங்கள் செல்வழித்தும் காப்பாற்ற முடியாமல் பறிகொடுத்தார் மற்றொரு தாய்!

பாகலூரில் டெங்கின் தாண்டவம் மோசமாக உள்ளது. அரசு மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் இல்லை சாதாரண ஜுரம் என்று சொல்ல அதிகாரிகள் மருத்துவர்களை நிர்பந்திக்கின்றனர், இங்கு வசதி இல்லை ஒசூருக்கு செல் என்கின்றனர்; ஒசூருக்கு சென்றால், ஒன்றிரண்டு நாட்கள் பார்த்துவிட்டு சீரியசாக இருக்கிறது, கிருஷ்ணகிரிக்கு எடுத்துச் சென்றுவிடுங்கள் என்கின்றனர்; கிருஷ்ணகிரி மருத்துவமனையிலோ ஆயிரக்கணக்கான மக்கள் தவிக்கின்றனர்; இரத்த பரிசோதனைக்குக் கூட குப்பிகள் இல்லை; போதிய மருந்துகள்–மருத்துவர்கள் இல்லாததால், இருக்கின்ற ஊழியர்கள் திண்டாடுகின்றனர், நமது மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் இதுதான் நிலைமை!

டெங்குவினால் சுமார் 10,000 பேர் தீவிரமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை நூற்றுக்கணக்கானவர்கள் இறந்துள்ளனர். மக்களைக் காக்க வேண்டிய எடப்பாடி அரசோ டெங்கினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து சொல்வதில்தான் தீவிரமாக செயல்படுகிறது. டெங்குவைக் கட்டுப்படுத்த போர்க்கால நடவடிக்கை இல்லை; மறுபுறமோ அரசு மருத்துவமனைகளை தனியார்மயமாக்குகிறது மோடி அரசு!

2015 ஆம் ஆண்டில் மழை வெள்ள மரணங்கள்; 2016 ஆம் ஆண்டில் விவசாயிகள் தற்கொலைகள்; 2017 ஆம் ஆண்டில் டெங்கு மரணங்கள் – மக்கள் மடிவதை வேடிக்கைப் பார்ப்பதுதான் இந்த அரசின் நிலை!

*மக்கள் சாகிறார்கள்... நேர்மையான மருத்து ஊழியர்கள் தவிக்கிறார்கள்... அரசு அதிகாரிகள் ஊழலில் திளைக்கிறார்கள்... ஆட்சியாளர்களோ பதவிக்காக அலைகிறார்கள்... ஆளத் தகுதியிழந்த இந்த அரசுக் கட்டமைப்பை இனியும் சகிக்க வேண்டுமா?*

AGARAM D